சுருக்கம்

பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் – உரிய அமைப்பிடமிருந்து பள்ளிக் கட்டிட அனுமதி பெறாத பள்ளிகள் – தற்காலிக தொடர் அங்கீகாரம் 31.05.2016 வரை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி(பொ.நூ.2)த்துறை

அரசாணை(நிலை) எண். 134

நாள் 18 .08.2015
திருவள்ளுவராண்டு, 2045
ஆவணி 1

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண். 48 பள்ளிக் கல்வி (எக்ஸ்2) துறை, நாள் 21.07.2004
2. அரசாணை (நிலை) எண். 131 பள்ளிக் கல்வி (பி) துறை நாள்.10.08.2006
3. அரசாணை (நிலை) எண். 270 பள்ளிக் கல்வி (எக்ஸ்2) துறை நாள் 22.10.2012.
4. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண்.5391/ அ1/2015, நாள் 03.08.2015.

*******

ஆணை:-

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பேராசியர் எஸ்.வி.சிட்டிபாபு அவர்களின் தலைமையிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நீதியரசர் திரு. கே. சம்பத் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு தேவையான 19 இனங்கள் குறித்து ஆணை வெளியிடப்பட்டன. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகள் பாதுகாப்பு தொடர்பாக ஆணை வெளியிடப்பட்டபோது கட்டிடங்கள் தொடர்பாக கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

"பள்ளிகளில் கட்டிட வரைபட அனுமதி உரிய அலுவலரிடம் பெற்ற பின்னரே கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்"

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், விதிகளின்படி பள்ளிக் கட்டிடத்தின் வரைபடத்திற்கு கிராம ஊராட்சித் தலைவரால் நகர் மற்றும்

ஊரமைப்புத் துறையின் இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநரை கலந்தாலோசித்து ஒப்புதல் வழங்கவேண்டும் என்றும், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம் அங்கீகாரம் பெறாத பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி உரிய கட்டிட வரைபட அனுமதிக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டது என்றும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 113–C–ஐ நடைமுறைப்படுத்துதல் சார்ந்து விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பரிந்துரை செய்ய ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் குழு அமைத்து அரசாணை (நிலை) எண்.161 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, நாள் 08.11.2014–ல் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அக்குழு அறிக்கை பெறப்பட்டு அதன்மீது உரிய ஆணை பிறப்பிக்கப்படும்வரை ஏற்கனவே கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களை வரைமுறைப்படுத்தி நகர் ஊரமைப்புத்துறை / சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் / உள்ளூர் திட்டக் குழுமத்தில் ஆணை பெற இயலாத நிலை உள்ளது என்றும், அரசாணை (நிலை) எண். 270 பள்ளிக் கல்வி (எக்ஸ்2)த் துறை, நாள் 22.10.2012 வெளியிடுவதற்கு முன்புவரை பள்ளிக் கட்டிடங்களுக்கான வரைபட அனுமதி நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக் குழுமம் / சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் பெறப்பட வேண்டும் என எவ்வித ஆணையும் இல்லாத நிலையில், உள்ளாட்சி அமைப்பிடம் பெறப்பட்ட பள்ளிக் கட்டிட வரைபட அனுமதியினைக் கொண்டு பள்ளித் துவங்க அனுமதி மற்றும் தற்காலிக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டு வந்தன என்றும், தொடர் அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்த பள்ளிகளுக்கு பள்ளிக் கட்டிடங்களுக்கான அனுமதி நகர் மற்றும் ஊரமைப்புத் துறை/ உள்ளூர் திட்டக் குழுமம் / சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் பெற்று முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.05.2015 வரை ஓராண்டு காலத்திற்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 18 (5)–ன்படி அங்கீகாரம் முடிவடைந்து அங்கீகாரத்தை நீட்டித்து பெறாமல் பள்ளியை நடத்திவருவது குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ஐ மீறிய செயலாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், பள்ளி கட்டிட வரைபடம் அனுமதி உரிய அமைப்பிடம் பெறாமல் அனுமதி கோரும் பள்ளிகள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன என்றும், பள்ளி வாகனத்தின் தரச்சான்றினை புதுப்பிக்க நடப்பில் உள்ள அங்கீகாரச் சான்று தேவைப்படுகிறது எனத் தெரிவித்து பள்ளி நிர்வாகங்களிடமிருந்து அங்கீகாரத்தினை நீட்டித்து வழங்கக் கோரி முறையீடுகள் வந்தவண்ணம் உள்ளது என்றும், மேலும் பள்ளியில் அன்றாடம் ஏற்படும் சிறுசிறு நிர்வாகப் பிரச்சனைகளுக்கு அங்கீகாரச் சான்று தேவைப்படுவதாலும், அங்கீகாரச் சான்று அத்தியாவசிய ஒன்றாக உள்ளது என்றும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி அங்கீகாரம் இன்றி பள்ளி செயல்படக்கூடாது என்பதாலும், பள்ளியில் பயின்றுவரும் மாணவ / மாணவியரின் கல்வி நலன் கருதியும் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்று வரும் பள்ளிகள் உள்ளாட்சி அமைப்பிடம் பள்ளிக் கட்டிட வரைபட அனுமதி பெற்றிருப்பின், அப்பள்ளிகளுக்கு "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை/ உள்ளூர் திட்டக் குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கட்டிட வரைபட அனுமதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் 31.05.2016 வரை தற்காலிக தொடர் அங்கீகாரம் நீட்டித்து வழங்க ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4.மேற்கண்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்து, ஏற்று, உரிய அங்கீகாரம் பெறாமல் பள்ளிகளை நடத்துவது இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி சட்டத்தை மீறிய செயல் என்பதை கருத்தில் கொண்டும், பள்ளி வாகனங்களின் தரச் சான்றினை புதுப்பிக்கவும், பள்ளிகளில் ஏற்படும் சிறு சிறு நிர்வாக பிரச்சினைகளை தீர்க்கவும்,

பள்ளிக்கு அங்கீகாரம் தேவை என்பதாலும், பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவிகளின் நலன் கருதியும், ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்று வரும் பள்ளிகள் உள்ளாட்சி அமைப்பிடம் பள்ளிக் கட்டிட வரைபட அனுமதி பெற்றிருப்பின், அப்பள்ளிகளுக்கு "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக் குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கட்டிட வரைபட அனுமதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் 31.05.2016 வரை தற்காலிக தொடர் அங்கீகாரம் நீட்டித்து வழங்க மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–6
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6
தொடக்கக் கல்வி இயக்குநர்,
சென்னை–6

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்